**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை திரு.C. உதயசுந்தரம்.,பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்–2, ஆத்தூர்.**

2026ம் ஆண்டு மே திங்கள் 25ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 1741/2025**

**(CNR No) TNSA140065302025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – காவல் உதவி ஆய்வாளர், கெங்கவல்லி காவல் நிலையம். குற்ற எண். 92/2025 |
| // எதிர் // | | |
| எதிரி | – | வசந்தி (51), க/பெ. சந்திரன். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி வசந்தி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் படியும், |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி வசந்தி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் படியும், |
| தீர்மானம் | – | இறுதியாக, எதிரி வசந்தி மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பது என முடிவுசெய்து எதிரி வசந்தி–ஐ அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர் குற்றவாளி இல்லையென தீர்மானித்து எதிரியை 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| புகார் நாள் | – | 28.04.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | 28.04.2025 |
| பிணையில் சென்ற நாள் | – | 28.04.2025 |

| | | |
|---|---|---|
| கோப்பு நாள் | – | 31.12.2025 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 20.05.2026 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 20.05.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 25.05.2026 |

எதிரியின் மீதான இந்த வழக்கானது இந்நீதிமன்ற கோப்பிற்கு கடந்த 31.12.2025 ம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசுத்தரப்பில் அறிவார்ந்த அரசு குற்றத்துறை வழக்குரைஞர் நிலை–2 அவர்களும், எதிரி தரப்பில் அறிவார்ந்த வழக்குரைஞர் திருவாளர்.K.சந்தோஷம் அவர்கள் ஆஜராகி எடுத்துரைக்க இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டும் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1) கடந்த 28.04.2025ம் தேதி காலை 10.00 மணிக்கு கெங்கவல்லி காவல் நிலைய சரகம் புனல்வாசல் மூலக்காட்டிலுள்ள எதிரி வசந்தி என்பவரின் வீட்டிற்கு அருகில் எதிரி வசந்தி என்பவர் அரசு அனுமதி இல்லாமல் அரசு மதுபானம் சுமார் 180 MLஅளவு கொண்ட BLACK PEARL BRANDY–08 பாட்டில்களை அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி வசந்தி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கெங்கவல்லி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது ஒரு குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2) குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் சார்ந்திருக்கும் வழக்காவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் நகல்கள் கட்டணமின்றியும் காலதாமதமின்றியும் பி.என்.எஸ்.எஸ் பிரிவு 230–ன் படி எதிரிக்கு வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிரியிடம் குற்றம் பற்றி வினவ எதிரி தன் மீதான சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் படியான குற்றத்தை மறுத்தார். வழக்காவணங்களை பரிசீலனை செய்த பின்பும் இருதரப்பும் எடுத்துரைத்ததைக் கேட்டபின்பும் எதிரி வசந்தி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கிக் கூறி வினவ எதிரி அக்குற்றச்சாட்டினை மறுத்தார்.

4) எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான வழக்கை நிருபிக்கும் விதமாக அ.த.சா.1 மற்றும் அ.த.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டது.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு**

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.த.சா.1 மற்றும் அ.த.சா.2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் அ.த.சா.1 ரமேஷ் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்யும்போது சாட்சியாக இருந்தது பற்றியும், அ.த.சா.2 கணேஷ்குமார் இவ்வழக்கில் விசாரணை அதிகாரி மேல்விசாரணை மேற்கொண்டு எதிரி வசந்தி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6) அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியப் பகுதிகளை பி.என்.எஸ்.எஸ் 351 (1) (ஆ)–ன் கீழ் விளக்கிக் கூறி கேள்வி கேட்க எதிரி தன் மீதான சாட்சியத்தை மறுத்தார். இது தன் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றும், தன் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7) **அரசுத்தரப்பு வாதம் பின்வருமாறு.**

அரசுதரப்பு வழக்கறிஞர் நிலை -2 அவர்கள் அ.த.சா.1 மற்றும் அ.த.சா.2 வரையிலான சாட்சியங்கள், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சாண்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டும், எதிரி வசந்தி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது அதனால் அவர் தண்டிக்கத்தக்கப்படவேண்டியவர் என்று வாதிட்டார்.

8) ஆனால், எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரி குற்றவாளி இல்லை என்றும், மேற்படி வழக்கின் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால் எதிரி வசந்தி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act-ன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

10) இவ்வழக்கின் புகார்தாரரான அ.த.சா.1 ரமேஷ் அவர்களது சாட்சியத்தில் தான் தற்சமயம் கெங்கவல்லி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 28.04.2025அன்று காலை 10.00 மணியளவில் நானும், என்னுடன் தலைமைக்காவலர் திருமதி.மேனகா என்பவரும் காவல் உதவி ஆய்வாளர் திரு.கணேஷ்குமார் அவர்கள் தலைமையில், எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக கெங்கவல்லி காவல் நிலைய சரகம், புனல்வாசல் மூலக்காட்டில் உள்ள எதிரியின் வீட்டின் அருகில் கண்காணித்து சென்றபொழுது, அங்கிருந்த ஒரு பெண் நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை

பிடித்து விசாரித்தோம் என்றும், அப்போது அவர் அவரது பெயர் வசந்தி க.பெ சந்திரன் என்று கூறினார் என்றும், பின்னர் எதிரி விற்றதுபோக மீதம் அவரிடமிருந்த சுமார் 180 ML அளவுகொண்ட Black Pearl Brandy – 08 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதனால் எதிரி வசந்தி என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார் என்றும், பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த Black Pearl Brandy – 08 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையதுதான் என்றும், (கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) என்றும், பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்துக்களில் இருந்த திரவத்தை எங்களது உயர் அதிகாரியின் உத்தரவு படி காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்திலேயே, எங்கள் முன்னிலையில் கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தார் என்றும், அழித்தல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையது தான் என்றும், (அழித்தல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) என்றும், பிறகு எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் உதவி ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன் என்றும், காவல் உதவி ஆய்வாளர், என்னை விசாரித்தார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

11) இது தொடர்பாக அ.த.சா.2 கணேஷ்குமார் காவல் உதவி ஆய்வாளர் இந்த வழக்கின் எதிரியை கைது செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், தான் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி வசந்தி மீது குற்ற அறிக்கையை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12) மேற்படி அ.த.சா.1 மற்றும் அ.த.சா.2 வரையிலானவர்களின் சாட்சியங்களை வழக்கு ஆவணங்களுடன் சேர்த்து ஆராய்கையில் சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடமென்பதும், தனிநபர் சாட்சிகளை இவ்வழக்கில் சேர்க்க போதுமான வாய்ப்பு இருந்தும், அரசு தரப்பில் அவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்பது அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

13) மேலும், இவ்வழக்கில் எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் பிராந்தி பாட்டில்களை உரிய முறையில் அளவீடு செய்து இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்பது அரசு தரப்பு சாட்சி 1 தனது குறுக்கு விசாரணையில் தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான் என்றும், சம்பவ இடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ சார்பு ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான் என்றும், அரசு தரப்பு சாட்சி 2 தனது குறுக்கு விசாரணையில் கைப்பற்றியதாக சொல்லப்படும் பிராந்தி பாட்டில்களில் உள்ள சாராயத்தை அளந்து பார்த்தோமா என்றால் இல்லை தோராயமாக கூறியுள்ளோம் என்றும், சம்பவம் இடம் தொடர்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளது தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4 (1) (C) TNP Act–ன் கீழ் 180 ML அளவுகொண்ட Black Pearl Brandi–08 பாட்டில்களை வைத்திருந்தார் என்பதை நிருபிக்க போதுமானதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுவதால், மேற்கண்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் பிராந்தி பாட்டில்களை மாதிரி எடுத்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து பகுப்பாய்விற்கு அனுப்பாமல் போலீசாரே அழித்து அதற்கு போலீசாரையே சாட்சிகளாகவும் சேர்த்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937 பிரிவு 32–ன் கீழான நிபந்தனைப்

படி இந்த பிரிவின் கீழ் எந்தவொரு அதிகாரி அல்லது நபரால் எந்தவொரு சட்டவிரோத அரக்கையும் பறிமுதல் செய்யப்பட்டால் அத்தகைய அதிகாரி அல்லது நபர் ஒரு மதுவிலக்கு அதிகாரி அல்லது காவல் ஆய்வாளர் பதவிக்கு குறையாத எந்தவொரு போலீஸ் அதிகாரி முன்னிலையில் 1. சட்டவிரோத அரக்கின் இரண்டு மாதிரிகளை அல்லது பரிந்துரைக்கப்பட்ட அளவு மற்றும் அத்தயை முறையில் எடுத்து, 2. சட்டவிரோத அரக்கை அழித்து அல்லது அழிக்கச் செய்து ( சட்டவிரோத அரக்கை) வைத்திருந்த பானைகளை அல்லது பிற கொள்கலன்களை எடுத்து மாதிரிகள் எடுக்கப்பட்ட மற்றும் (சட்ட விரோத அரக்கை) அழிக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து ஒரு சான்றிதழுடன் பறிமுதல் செய்யப்பட்ட மொத்த அளவு மாதிரிகளாக எடுக்கப்பட்ட மொத்த அளவு மற்றும் அழிக்கப்பட்ட மொத்த அளவு குறித்து வழக்கை விசாரிக்க அதிகார வரம்பு கொண்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பலாம் என்ற நிபந்தனையை அரசு தரப்பில் இவ்வழக்கில் கடைபிடிக்காதது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் சம்பவம் நடந்ததாக குறிப்பிடும் இடத்தினை பொருத்து பார்வை மகஜரோ, மாதிரி வரைபடமோ தயார் செய்யப்படவில்லை என்று அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியளித்துள்ளார்கள். மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் அளித்துள்ள சாட்சியங்களை ஆராய்கையில் அரசு தரப்பில் சொல்லியுள்ளபடி எதிரியால் இக்குற்றச்செயல் புரியப்பட்டதா என்பதிலேயே இந்நீதிமன்றத்திற்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

15) மேற்கண்ட சாட்சிகளின் முரண்பட்ட சாட்சியங்களை சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தை இந்நீதிமன்றத்தில் நிருபணம் செய்ய மாதிரி வரைபடமோ அல்லது பார்வை மகஜரோ தயார் செய்து அரசு தரப்பில் தாக்கல் செய்யாததும், இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகளையோ அல்லது கிராம நிர்வாக அலுவலரையோ அழைத்து ஒரு சாட்சிகளாக விசாரிக்காதது அரசு தரப்பு சார்ந்திருக்கும் வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம்

முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு ஆதரவாக வழங்குகிறது.

16) இறுதியாக, எதிரி வசந்தி மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பது என முடிவுசெய்து எதிரி வசந்தி–ஐ அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர் குற்றவாளி இல்லையென தீர்மானித்து எதிரியை 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இவ்வழக்கில் வழக்கு சொத்தாக எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019.</u>**

<table>
<tr><td>Sl.No</td><td>Case No:</td><td>:</td><td>CC No.1741/2025</td><td></td></tr>
<tr><td>2.</td><td>Name of the Police Station and Crime Number of the offence</td><td>:</td><td>Gangavalli P.S<br>Cr.No : 92/2025<br>Offence : 4(1)(C) TNP Act</td><td rowspan="6">Description of the Accused</td></tr>
<tr><td>3.</td><td>Name</td><td>:</td><td>Vasanthi</td></tr>
<tr><td>4.</td><td>Father's/ Husband Name</td><td>:</td><td>Chandran</td></tr>
<tr><td>5.</td><td>Occupation</td><td>:</td><td>Labourer</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td>:</td><td>3/75 Perumal Kovil street, Moolakadu, Punalvasal Tk, Salem Dt.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td>:</td><td>51</td></tr>
<tr><td>8.</td><td>Occurrence</td><td>:</td><td>28.04.2025</td><td rowspan="6">Date of</td></tr>
<tr><td>9.</td><td>Complaint</td><td>:</td><td>28.04.2025</td></tr>
<tr><td>10.</td><td>Apprehension</td><td>:</td><td>25.02.2026</td></tr>
<tr><td>11.</td><td>Release on bail</td><td>:</td><td>28.04.2026</td></tr>
<tr><td>12.</td><td>Commitment</td><td>:</td><td>---</td></tr>
<tr><td>13.</td><td>Commencement of trial</td><td>:</td><td>20.05.2026</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | Closure of trial | : | 20.05.2026 | |
| 15. | Sentence or order | : | 25.05.2026 | |
| 16. | Service of copy of judgment or finding on accused | : | Acquittal | |
| 17. | Explanation of delay | | --- | |

**<u>CASE SUMMERY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS IN R.O.C. NO. 814/2020/RG/F1, DT. 07.04.2021</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i | the period of remand of the accused | : | 28.04.2025 | | |
| ii | the date of filing of the complaint /final report in the Court | : | 31.12.2025 | | |
| iii | the date of committal of the case to the Court of Session | : | --- | | |
| iv | the date of questioning of the accused under section 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | : | 18.03.2026 | | |
| v | filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts; except routine petitions like petitions under section 317 of the Code; | : | Nil | | |
| vi | date of examination in-chief and cross-examination of witness | : | P.W1 | 20.05.2026 | 20.05.2026 |
| | | | P.W2 | 20.05.2026 | 20.05.2026 |
| vii | date of examination of the accused under section 313 of the Code | : | 25.05.2026 | | |
| viii | details of abscondence of an accused and his appearance / production, as the case may be | : | --- | | |
| ix | grant of stay by superior courts and the result thereof. | : | Nil | | |

18) மேற்படி தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினி மூலம் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மே திங்கள் 25ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.05.25 16:18:58 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்.

**பின்இணைப்பு:**

**1. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.த.சா.1 | ரமேஷ் |
| அ.த.சா.2 | கணேஷ்குமார் |

**2. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.2 | அழித்தல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.4 | அழித்தல் மகஜர் |
| அ.த.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை |

**3. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்கள்: –**

––– இல்லை –––

**4. எதிரி தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் சான்றுபொருட்கள்:–**

–––இல்லை–––

**<u>குறிப்பு:</u>**

1. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையிலிருந்தார்.

3. வழக்கின் முடிவு பற்றிய விவரம் காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.05.25 16:19:04 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்

Note: CSI Order Uploaded date in 25.05.2026